Pg. No 33

அனுப்புநர்
திரு இரா.க. மாரியப்பன், B.E., MBA.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்,
51, மேலரதவீதி, தூத்துக்குடி – 2
தொலைபேசி 0461 2322651
மின்னஞ்சல் dtcpttkddistrict@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்
ஆறுமுகநேரி பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

ந.க. எண் 2891/2021 தூமாஅ–2, நாள் 02.12.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052, கார்த்திகை

அய்யா,

**பொருள் :** மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் வட்டம் – ஆறுமுகநேரி பேரூராட்சி – கந்தசாமிபுரம் கிராமம் – சர்வே எண் 651/2–ல் 6900 சமீ (1.7 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி – ஒப்புதல் வழங்குதல் – குறித்து

**பார்வை :**
1. மனுதாரர் திரு மோ. சூரியபிரகாஷ் கடிதம் நாள் 26.10.2021, 15.11.2021, 01.12.2021 மற்றும் 22.11.2021
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 10.11.2021 மற்றும் 20.11.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 19799/2020 போ, நாள் 24.12.2020
4. அரசாணை எண் 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.06.2004
5. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017
6. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கடிதம் ந.க. எண் தி3/8612/2021 நாள் 20.09.2021
7. அரசாணை எண் 18 மற்றும் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 மற்றும் 31.01.2020
8. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23.09.2020
9. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 09.12.2020

Pg. No: 34

10. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30.08.2017
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 13686/2017 எல்ஏ1, நாள் 08.09.2017
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 14.10.2019
13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 05.02.2020

-------

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சி, கந்தசாமிபுரம் கிராமம், சர்வே எண் 651/2-ல் 6900 சமீ (1.7 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 10.11.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1-ல் சுட்டிய 15.11.2021, 01.12.2021 நாளிட்ட மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண் 3613/2021, 3614/2021, 3851/2021, நாள் 11.11.2021, 30.11.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி - 2

நகல்

1. திரு மோ. சூரியபிரகாஷ்
76-37, சுப்பிரமணியபுரம் தெரு,
திருச்செந்தூர் - 628 215
} பத்தி ஒன்று மட்டும்
2. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல்தளம், எழும்பூர், சென்னை
3. இருப்பு கோப்பு (வரைபடம் 1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.கி.கணேசன்

ந.க.எண்.1656/2021 நாள். 24.12.2021

பொருள் : மனைபிரிவு அங்கீகாரம் – தூத்துக்குடி மாவட்டம் – ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி – கந்தசாமிபுரம் கிராமம் – சர்வே எண். 651/2–ல் 6900 ச.மீ பரப்பளவு காலியிடத்தினை – வீட்டுமனை குடியிருப்பு பகுதிகளாக (பிளாட்) பிரித்து மனைபிரிவு அமைத்துள்ளது – தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது – மனைபிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை :

1. மனுதாரர் திரு.மோ. சூரிய பிரகாஷ் என்பவரது விண்ணப்பம் நாள். 07.12.2021.
2. தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்ப அங்கீகார எண் 2899/2021 தூமா அ–2 நாள் 02.12.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020 போ, நாள் 24.12.2020
4. அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.06.2004
5. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017
6. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கடிதம் ந.க.எண்தி3/8612/2021 நாள்.20.09.2021
7. அரசாணை எண் 18 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ,நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண் 16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ,நாள்.31.01.2020
8. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (ந.வ.4(1) நாள். 23.09.2020
9. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (ந.வ.4(1) நாள். 09.12.2020
10. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 30.08.2017
11. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017 எல் ஏ1,நாள் 08.09.2017
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019 பி ஏ2 நாள் 14.10.2019
13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/ 2019 பி ஏ2 நாள் 05.02.2020

-------------

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரிசிறப்புநிலை பேரூராட்சி பகுதியில் கந்தசாமிபுரம் கிராமம் சர்வே எண். 651/2 ல் அமைந்துள்ள **6900 ச.மீ** பரப்பளவு உள்ள காலியிடத்தினை குடியிருப்பு மனைபிரிவுகளாக 30 எண்ணம் பிளாட் அமைத்து அதற்கு பார்வை 2ன் படி வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டும், பத்திர பதிவுகளில் உள்ள விபரங்களின் படி சாலைகள், பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்து பிற்காலங்களின் பேரூராட்சி பராமரிப்புக்கு ஏதுவாக பேரூராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நில உரிமையாளர் மேற்படி இடத்திற்கு ஒப்படைப்பு பதிவேட்டில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை அடிப்படையாக வைத்து மேற்படி இடங்களில் தெரு விளக்கு வசதி பிற்காலங்களில் பேரூராட்சியில் மூலம் செய்து கொடுப்பதற்கான கட்டணமும் மேலும் வளர்ச்சிக் கட்டணமாக ரூ.364200/– மட்டும் செயல் அலுவலர் ஆறுமுகநேரி பேரூராட்சி பெயருக்கு இந்திய ஓவர்சிஸ் வங்கி வரைவோலை மூலம் செலுத்தியுள்ளார். எனவே மனைப்பிரிவு அங்கீகாரம் செய்வதற்கான நெறிமுறைகள் நில உரிமைதாரரால் செய்யப்பட்டுள்ளதால் கீழ்காணும் கூடுதல் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி புல எண்ணில் போடப்பட்டுள்ள 30 குடியிருப்பு மனைப்பிரிவுக்கு மட்டும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவு வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அங்கீகாரம் தொழில்நுட்ப அனுமதி மற்றும் மனைபிரிவு அங்கீகாரம் வழங்கிய எண் குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்து புகைப்படம் எடுத்து கொடுக்க வேண்டும்.
2. அங்கீகாரம் வழங்கிய பின்பு அல்லது தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்பு மனைபிரிவு செய்யப்பட்டுள்ள அளவுகளில் எவ்வித மாற்றமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தூத்துக்குடி அவர்களது முன் அனுமதி பெறாமல் செய்யக்கூடாது.
3. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட (பத்திர பதிவு மூலம்) இடங்களை உட்பிரிவியர் அலுவலகத்தில் நில உரிமைதாரர் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது இதற்கான செலவு கட்டணத்தை பேரூராட்சிக்கு செலுத்த பேரூராட்சி மூலம் உட்பிரிவு செய்து கொள்ள இசைவு தெரிவித்து நில உரிமைதாரர் பத்திரத்தில் எழுதி கையெழுத்திட்டு தர வேண்டும்.

Pg. No: 37

4. மனைபிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளில் வீடு கட்டும் போது சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து பேரூராட்சி மூலம் கட்டிட அங்கீகாரம் பெற்று கொள்ள வேண்டும் என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.
5. நன்கொடை பத்திரம் மூலம் பேரூராட்சி அல்லது அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் குத்தகைக்கு விடவோ, நில உரிமைதாரரே பிளாட் போட்டு விற்பனை செய்வதோ அல்லது சொந்தமாக எடுத்து கொள்ளவோ கூடாது. இதில் நில உரிமைதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

செயல் அலுவலர்
சிறப்புநிலை பேரூராட்சி
ஆறுமுகநேரி

24.12.21

பெறுநர்
திரு.மோ. சூரிய பிரகாஷ்,
த/பெ.மோகன்,
76/37 , சுப்பிரமணியபுரம் தெரு.
திருச்செந்தூர்.

நகல்

நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்கள், தூத்துக்குடி.